அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :97/2017

தேதி : 18/09/2017

**GST வரி விதிப்பின் கீழ் கொண்டு வருவதன் மூலமே**
**பெட்ரோலியப் பொருள்களின் விலைகளைக் குறைக்க முடியும் - மத்திய அரசு பரிசீலிக்க**
**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் திரு.ஆர்.சரத்குமார் அவர்கள் கோரிக்கை:**

பெட்ரோல் மற்றும் டீசல் உள்ளிட்ட பெட்ரோலியப் பொருள்களின் விலைகள் கடந்த 3 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்தும், டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு அதிகரித்தும் கூட, எண்ணெய் நிறுவனங்கள் கணிசமான அளவு விலைகளைக் குறைக்காததன் மூலம் கடுமையான விமர்சனத்திற்கும், கண்டனங்களுக்கும் ஆளாகியுள்ளன.

பெட்ரோலியப் பொருள்கள், ஆல்கஹால் போன்றவை GST வரிவிதிப்பின் கீழ் கொண்டுவரப்படவில்லை. இவை பொருளாதாரத்தில் 30 முதல் 40 சதவிகிதப் பங்களிக்கின்றன. பெட்ரோலியப் பொருள்களின் விலைகளை அவற்றின் மீது சுமத்தப்படும் கலால் மற்றும் மதிப்புக் கூட்டு வரிகளும், விற்பனையாளர்களின் கமிஷனும் நிர்ணயம் செய்கின்றன.

கடந்த 3 ஆண்டுகளில் பெட்ரோல் மீதான கலால் வரி 54 சதவிகிதமும், டீசல் மீதான கலால் வரி 154 சதவிகிதமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. பெட்ரோலியப் பொருள்களின் மூலம், 2014-15ல் 3.32 லட்சம் கோடி ரூபாய் கிடைத்த வருவாய், 2016-17ல் 5.24 லட்சம் கோடி ரூபாய் அளவு கூடியிருப்பதன் மூலம் வரிவிதிப்பின் அதிகரிப்பை புரிந்துகொள்ள முடியும்.

இதைத்தவிர, மாநிலங்களின் மதிப்புக் கூட்டு வரி கடந்த 3 ஆண்டுகளில் சராசரியாக பெட்ரோலுக்கு 46 சதவிகிதமும், டீசலுக்கு 48 சதவிகிதமும், விற்பனையாளர்கள் கமிஷன் 73 சதவிகிதமும் அதிகரித்திருப்பதே இன்றைய அபரிதமான விலை அதிகரிப்பிற்கு அடிப்படைக் காரணம் என்பதும் தெளிவாகும்.

பொருளாதாரத்தில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் பெட்ரோலியப் பொருள்களின் விலை அதிகரிப்பைக் கட்டுக்குள் கொண்டுவர சில சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்வதற்கு உகந்த தருணம் இதுவே. அதன்படி பெட்ரோலிய பொருள்களை மத்திய அரசின் ஒரே வரி திட்டமான GST வரிவிதிப்பின் கீழ் கொண்டுவருவதே தீர்வாக அமையும்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



பொருளாதார நிபுணர்களின் கணிப்புப்படி, கலால் வரி (Excise Duty) மற்றும் மதிப்புக்கூட்டு (VAT) வரிகளை நீக்கிவிட்டு 12%, 18%, அல்லது 28% என்ற அளவில் மட்டுமே GST வரி விதிக்கப்பட்டால், தற்போதைய விலையிலிருந்து பெட்ரோலின் விலைகள் முறையே 31, 28, 20 ரூபாய் அளவு குறைவதற்கும், டீசலின் விலைகள் முறையே 22, 14, 10 ரூபாய் அளவு குறைவதற்கும் வாய்ப்பு உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், பெட்ரோலியப் பொருள்களின் விலை சீர்திருத்தம் GST வரிவிதிப்பின் மூலமே சாத்தியம் என்ற கருத்தைப் பதிவுசெய்திருக்கிறார்.

GST வரிவிதிப்பின் மூலம் விலைகள் குறைவதால், அரசுக்கு வருவாய் இழப்பு என்ற வாதம் முன்வைக்கப்படலாம். ஆனால், விலைகள் குறையும்போது, தொழில்துறையில் உற்பத்தி, ஏற்றுமதி உள்ளிட்டவை பன்மடங்கு அதிகரித்து அதன் மூலம் வருவாய் அதிகரிப்பும், வேலைவாய்ப்புகளின் அதிகரிப்பும் ஏற்பட்டு பொருளாதாரம் மேம்பாடு அடையும். அதுமட்டுமல்லாமல், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைந்து பணவீக்கம் மேலும் குறையும். இதற்கான அடிப்படைத் தேவை, மத்திய மாநில அரசுகளின் சீர்திருத்த மனப்பான்மையும், தற்காலிகத் தியாகஉணர்வும் மட்டுமே.

எனவே பெட்ரோலியப் பொருள்களை GST வரிவிதிப்பின் கீழ் கொண்டு வந்து, பொருளாதார சீர்திருத்தப் புரட்சி ஏற்படுத்தவேண்டும், GST கவுன்சிலுக்கு இதைப் பரிந்துரை செய்யவேண்டும் என மத்திய அரசை சமத்துவ மக்கள் கட்சி சார்பில் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

பெட்ரோல், டீசல் விலை உயர்வால் அனைத்து தரப்பினரும் பாதிப்பிற்குள்ளயிருக்கும் வேளையில் பெட்ரோல், டீசல் வாங்குபவர்கள் ஒன்றும் ஏழைகளோ, பட்டினி கிடப்பவர்களோ அல்ல என்று மத்திய அமைச்சர் அல்போன்ஸ் கன்னதானம் மக்களை புண்படுத்தும் விதமாகப் பேசியிருப்பதை இத்தருணத்தில் கண்டிக்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்



**ஆர்.சரத்குமார்**
நிறுவன தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com